


**27. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நேபாள பெருவெள்ளத்தில் காணாமல் போன தமிழர்களை மீட்கும் பணிகளை துரிதப்படுத்துமாறு முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

2. தமிழ்நாட்டில் பன்றி காய்ச்சல், மற்றும் டெங்கு பாதிப்புகளை கண்காணிக்க மருத்துவக்குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளதாக மாநில அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் பேரவையில் தெரிவித்துள்ளார்.

3. ஆதி திராவிடர் பழங்குடியினர் மாணாக்கருக்கு 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 150 சமூக நீதி விடுதிகள் கட்டப்படும் என்று அமைச்சர் திரு. வன்னியரசு அறிவித்துள்ளார்.

4. பள்ளி கல்லூரி மாணாக்கருக்கான சமூக நீதி விடுதிகளில் உணவு கட்டணம் உயர்த்தப்படுவதாக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சம்பத் குமார் கூறியுள்ளார்.

5. புடாபெஸ்ட் ஸ்குவாஷ் ஓப்பன் அரையிறுதியில் இந்தியாவின் வீர்சோட்ராணி - வேலவன் செந்தில்குமாரை இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

நேபாள பெருவெள்ளத்தில் காணாமல் போன தமிழகத்தை சேர்ந்தவர்களை மீட்பது குறித்து முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் சென்னையில் இன்று அவசர ஆலோசனை மேற்கொண்டார்.

இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்த அவர், மீட்பு பணிகளுக்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

தில்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல ஆணையர் திரு. ஆஷிஸ் குமார் தலைமையிலான குழு, நேபாளம் செல்ல இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

முன்னதாக தமிழக சட்டப்பேரவையில், இன்று இதுதொடர்பாக எதிர்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட உறுப்பினர்கள் கொண்டு வந்த கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்த மாநில அமைச்சர் திரு. ராஜ்மோகன், இச்சம்பவத்தில் 103 தமிழர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

பெருவெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்பதற்குரிய நடவடிக்கைகளை மத்திய அரசுடன் இணைந்து மாநில அரசு மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 57 பேர் கைலாய சுற்றுலாவிற்கு சென்ற இடத்தில் திடீர் வெள்ளத்தில் சிக்கி பாதிப்பிற்கு ஆளான நிலையில், 20 தமிழர்கள் உடனடியாக மீட்கப்பட்டிருப்பதாகவும். அவர்களை அழைத்து வர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

மீதமுள்ள 34 தமிழர்களின் விவரங்களை பெறுவதற்கு காட்மாண்டு நகரில் உள்ள இந்திய தூதரகத்தின் மூலம் நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்றார்.

இதைத்தவிர மேலும் சென்னையிலிருந்து ஒருநிறுவனம் சார்பில் கைலாய யாத்திரைக்கு சென்றுள்ள 49 தமிழர்களின் விவரங்களை பெறுவதற்கும் அரசு முயற்சி எடுத்து வருவதாக கூறினார்.

இதுபற்றி கூடுதல் தகவல் மற்றும் விவரங்களை பெறுவதற்கு டில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் கட்டுப்பாட்டு அறை ஒன்று செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ச.பே. - அருண்ராஜ்

தமிழ்நாட்டில் பன்றி காய்ச்சல், மற்றும் டெங்கு பாதிப்புகளை கண்காணிக்க மருத்துவக்குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் பேரவையில் இன்று கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

நோய் பரவல் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் கூறிய அமைச்சர், எளிதில் நோய் தாக்குதலுக்கு

ஆளாகும், முதியோர் மற்றும் கர்பிணி பெண்களுக்கு தடுப்பூசி போடுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்றார்.

செஞ்சி பேரூராட்சியிலுள்ள அரசு மருத்துவமனைக்கு சுமார் 5 கோடி செலவில் கூடுதல் கட்டட வசதி, 75 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தில் புதிதாக 100 இடங்களில் சுகாதார உதவி மையஙகள் தொடங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

புதிதாக 300 செவிலியர்களை நியமிப்பதற்கு அரசு முடிவெடுத்திருப்பதாகவும், 284 உயர் சிறப்பு மருத்துவர்கள் பணியிடம் நிரப்பப்பட உள்ளதாகவும் அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ச.பே. - செங்கோட்டையன்

மாநிலம் முழுவதுமுள்ள ஆயிரத்து 246 கிராம நிர்வாக அலுவலக வளாகங்களில் கழிப்பறை வசதிகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு. K. A. செங்கோட்டையன் தெரிவித்தார்.

பேரவையில் பல்வேறு உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர், தற்போது நடைபெற்று வரும் மக்கள்தொகை கணக்கெடுப்பு பணிகள் நிறைவடைந்த பின்னர், புதிதாக கோட்டங்கள் மற்றும் வட்டங்களை பிரிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்றார்.

பல்வேறு பகுதிகளில் சாதிச்சான்றிதழ் பெறுவதில் இடையூறு ஏற்படும் நிலைக்குறித்து மத்திய அரசுக்கு, மாநில அரசு கடிதம் எழுதியிருப்பதாகவும், அவர்களின் ஒப்புதல் கிடைத்தவுடன் அந்தந்த பகுதிகளில் பாரம்பரியமாக வாழும் மக்களுக்கு தடையின்றி இவை வழங்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

21-ம் நூற்றாண்டில் நாட்டில் நவீன விளையாட்டு சூழல் அமைப்பை உருவாக்க மத்திய அரசு உறுதிப் பூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

தேசிய விளையாட்டு தின கொண்டாட்டங்களை முன்னிட்டு கேலோ இந்தியா கலந்துரையாடல் நிகழ்வில் இளையோரிடையே காணொலி மூலம் இன்று உரையாற்றிய பிரதமர், விளையாட்டு பல்கலைக் கழகங்கள் முதல் நவீன பயிற்சி

மையங்கள் வரை திறமையாளர்களுக்கு ஒவ்வொரு நிலையிலும், ஆதரவு கிடைக்கும் வகையிலான ஒரு சூழல் நாட்டில் உருவாக்கப்பட்டு வருவதாக கூறினார்.

பதக்கங்களை வெல்வது மட்டுமல்லாது, வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் விளையாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

5 முதல் 15 வயதிற்குட்பட்ட விளையாட்டுத்திறன் படைத்த குழந்தைகளை கண்டறிவதற்கான தேடல் முயற்சியை செங்கோட்டையிலிருந்து தான் அறிவித்திருந்ததை பிரதமர் நினைவுக்கூர்ந்தார்.

நிகழ்ச்சியில் பேசிய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா பிரதமர் திரு. நரேந்திரமோடியின் தலைமையின் கீழ் விளையாட்டுத் துறை இளையோர் மேம்பாட்டிற்கான ஒரு முக்கிய கருவியாக உருவெடுத்துள்ளதை குறிப்பிட்டார்.

நாடுமுழுவதுமுள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 2 இடங்களில் இந்நிகழ்வு நடைபெற்றது.

தர்மபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளி மற்றும் மொரப்பூர் கல்லூரிகளில் மை பாரத் கேந்த்ரா சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சி பயனுள்ள வகையில் அமைந்ததாக மாணாக்கர் தெரிவித்துள்ளனர்.

.. வாய்ஸ் ..

திருப்பத்தூர், ராணிப்பேட்டை, நாமக்கல், நீலகிரி, தூத்துக்குடி, பெரம்பலூர், கிருஷ்ணகிரி, சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இளையோர் விளையாட்டு வீரர்கள் பங்கேற்று போதைப்பொருள் ஒழிப்பு தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஞானேஷ்குமார்

தமிழ்நாட்டில் நடைபெற்ற அண்மை சட்டப்பேரவை தேர்தலில் அதிகப்படியான வாக்குகள் பதிவாகி உள்ளது என தலைமை தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், உலகின் பழமையான ஜனநாயக நாடான நம்நாட்டில் தேர்தல் சுமூகமான முறையில் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெறுவதை சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ச.பே. - ஆதவ்அர்ஜுனா

தமிழகத்திற்கு சாலைகள், பாலங்கள் உள்ளிட்ட புதிய திட்டப் பணிகளுக்காக சுமார் 2 லட்சம் கோடி ரூபாய் நிதியுதவி வழங்குவதாக மத்திய அரசு உறுதி அளித்துள்ளது என பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஆதவ்அர்ஜுனா சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.

சென்னை முதல் கன்னியாகுமரி வரை 8 வழிச்சாலை அமைப்பதற்குரிய திட்ட அறிக்கையை தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பி வைத்ததுடன் மத்திய அமைச்சரிடமும் இதுகுறித்து பேசியிருப்பதாக எடுத்துரைத்தார்.

செங்கல்பட்டு, திருவள்ளூர், மாமல்லபுரம் பகுதிகளிலிருந்து சென்னை வரும் சாலைகளில் போக்குவரத்து நெரிசலை தடுக்கும் வகையில் உயர்மட்டபாலம் உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

காட்பாடி ரயில் நிலையத்திலிருந்து பாலாறு பாலம் வரை உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நான்குவழிச்சாலை அமைப்பதற்குரிய நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருவதாகவும், இதற்காக ஆயிரத்து 42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

மத்தியஅரசு சாலை பராமரிப்பிற்கான தொகையை ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தி இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு இடங்களில் ரயில்வே மேம்பாலம் மற்றும் உள்வட்டச் சாலைகள் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருப்பதால் விரைவில் இதுகுறித்து ஆய்வு செய்து பணிகள் தொடங்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

வன்னிஅரசு

தமிழகத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கருக்கு 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 150 சமூக நீதி விடுதிகள் கட்டப்படும் என்று சமூக நீதித்துறை அமைச்சர் திரு. வன்னியரசு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானிய கோரிக்கையை இன்று தாக்கல் செய்து பேசியஅவர்,

சமூகநீதி விடுதி பராமரிப்பு தொகை பள்ளி விடுதிகளுக்கு 75 ஆயிரம் ரூபாயாகவும்,

கல்லூரி விடுதிகளுக்கு ஒருலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்படும் என்றார்.

ஆதி திராவிட மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் 100 சமுதாயக்கூடங்கள் புதிதாக கட்டப்படும்,

சென்னை நந்தனத்தில் பழங்குடியினர் பண்பாட்டு மையம் அமைக்கப்படும்,

சமூக நீதி நல வாரியம் மற்றும் சமூக நீதி அறக்கட்டளை உருவாக்கப்படும்,

தூய்மை பணியாளர்களுக்கு சொந்த வீடுகள் வழங்குவதற்காக அகம் எனும் புதிய திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு 2 ஆயிரத்து 500 கான்கிரீட் வீடுகள் கட்டித்தரப்படும் உள்ளிட்ட 67 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

பேரவையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சம்பத் குமார், வெளியிட்ட அறிவிப்பில் சமூகநீதி, விடுதி, மாணவ மாணவியர்களுக்கான கலைத்திருவிழா நிகழ்ச்சிக்கான தொகை 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றார்.

சமூக நீதி விடுதியில் உணவு கட்டணம் பள்ளி மாணாக்கருக்கு ஆயிரத்து 800 ரூபாயாகவும்,

கல்லூரி விடுதி மாணாக்கருக்கு உணவு கட்டணம் 2000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

நாகை

தூத்துக்குடியில் தமிழ்நாடு புத்தக விற்பனையாளர்கள் சங்கத்தின் சார்பிலான புத்தக கண்காட்சி இன்று தொடங்கியது.

இக்கண்காட்சியில் 10 லட்சம் புத்தகங்கள் இடம் பெற்றுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

உயர்நீதிமன்றம்

தமிழகத்தில் இணையவழி மது விற்பனை செய்யும் அரசின் முடிவை ரத்து செய்யக்கோரிய வழக்கில் 4 வாரங்களில் பதிலளிக்குமாறு மாநில அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆன்லைன் மூலமாக மதுபானம் வாங்க முன்பதிவு செய்வதற்கு எதிரான பொதுநல வழக்கை இன்று விசாரித்த நீதிமன்றம், இந்த ஆணையை பிறப்பித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஸ்குவாஷ்

புடாபெஸ்டில் நடைபெறும் ஸ்குவாஷ் ஓப்பன் அரையிறுதியில் இன்று இந்திய வீரர்கள் வீர்சோட்ராணி, வேலவன் செந்தில்குமார் மோதவுள்ளனர்.

காலியிறுதியில் சோட்ராணி எகிப்தின் முகமது ஷெர்பினியையும், வேலவன் மலேசியாவின் ஏய்ன் யோவ் வையும் வென்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்தியாவிற்கு எதிரான 2-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இறுதிநாளான இன்று Follow On உடன் விளையாடும் இலங்கை தனது 2-வது இன்னிங்ஸில் சற்றுமுன் 8 விக்கெட் இழப்பிற்கு 355 ரன் எடுத்திருந்தது.

இலங்கை தற்போது 142 ரன் முன்னிலையில் உள்ளது.

முதல் இன்னிஸ் ஸ்கோர் இந்தியா 503 டிக்ளர்டு.

இலங்கை 290.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖